செ.வெ.எண்: 599 நாள்: 16.09.2019

**புதுக்கோட்டை நகராட்சியில் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட அண்ணா சிலை ரவுண்டானாவினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் திறந்து வைத்தார்.**

---

புதுக்கோட்டை நகராட்சியில் புதுப்பிக்கப்பட்டு சீரமைக்கப்பட்ட அண்ணா சிலை ரவுண்டானாவினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (16.09.2019) திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை நகராட்சியில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவ சிலை அமைந்துள்ள பகுதி ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்கும் பணி நடைபெற்றது. இந்நிதியின் கீழ் வர்ண பூச்சு, புதிதாக ரவுண்டானம் அமைத்தல், ஸ்டீல் படிக்கட்டுகல் அமைத்தல், நீரூற்று போன்ற பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, புதுப்பிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது. இப்பணிகளின் மூலம் அண்ணா சிலை புது பொழிவு பெற்றுள்ளது.

மேலும் புதுக்கோட்டை நகராட்சியில் பொதுமக்களின் வசதிக்காக சாலைவசதி, குடிநீர்வசதி, பூங்காக்கள் போன்ற பல்வேறு அடிப்படை வசதிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதேபோன்று பொதுமக்களின் அனைத்து கோரிக்கைகளும் தொடர்ந்து நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் நகராட்சி ஆணையர் (பொ) ஜீவாசுப்பிரமணியன், முன்னாள் மாவட்ட ஊராட்சிக் குழுத்தலைவர் ராமையா, மத்திய தொலைத்தொடர்பு ஆலோசனை குழு உறுப்பினர் பாஸ்கர், முன்னாள் நகர்மன்ற துணைத்தலைவர் சேட் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**